DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure)
***
IN THE COURT OF SUBORDINATED JUDGE MADURANTAKAM

Calender :
Miscellaneous :
Sessions : SC 78/2020
Deposition of Witness for : PW 1

| | |
|---|---|
| Name. | திரு. கண்ணன் |
| Father /Husband Name | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day 16.04.2025

**எதிரிகள் ஆஜர்.**

**CMP. 2/2025ல் பகரப்பட்ட உத்தரவுப்படி .அ.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் அளித்த புகாரினை காவல் நிலையத்தில் உள்ள காவலர் ஒருவர் எழுதினார். அதில் என்ன விவரம் எழுதப்பட்டுள்ள என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் நான் சொல்லித்தான் அந்த புகார் எழுதப்பட்டது. எழுதிய காவலர் என்ன பதவியில் உள்ளார் என்று எனக்கு தெரியாது. நான் 27.05.2016 அன்று புகார் அளித்தேன். புகாரினை 28.05.2016 அன்று காலை 8.00 மணி அளவில் காவல் நிலையத்தில் கொடுத்தேன். புகார் அளிக்கும்போது என்னுடன் யார் இருந்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. என் மகனை மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் 27.05.2016 அன்று இரவு 8.00 மணி அளவில் சிகிச்சைக்கு சேர்த்தேன். எத்தனை மணிக்கு செங்கல்பட்டு சென்றேன் என்றால் உடனே கிளம்பிவிட்டோம்.

2) சாவு இருக்கும்போது தகராறு நடந்ததா அல்லது சாவு எடுத்தபோது தகராறு நடந்ததா என்றால் சாவு இருக்கும்போது தகராறு நடந்தது. எத்தனை மணிக்கு சாவு எடுத்தார்கள் என்றால் எடுக்கும்பொழுது நான் அங்கு இல்லை. மீண்டும் எதிரிகள் எத்தனை மணிக்கு தகராறு செய்தார்கள் என்றால் இரவு 8.00 மணி அளவில் வந்து தகராறு செய்தார்கள். சம்பவ இடம் சுற்றி வீடுகள் கிடையாது. அதனால் சம்பவத்தை யாரும் பார்க்கவில்லை என்றால் சரிதான். எவ்வளவு மணி நேரம் தகராறு நடைபெற்றது என்றால் சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்றது. எதிரிகள் எனக்கு உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டதாக கூறும் இரும்பு ராடு எத்தனை அடி இருக்கும் என்றால் சுமார் 3 அடி இருக்கும். எதிரிகள் இருவரும்தான் அங்கு

வந்தார்கள். வேறு யாரும் வரவில்லையா என்றால் வரவில்லை. என் மகனை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும்போது நான் உடன் செல்லவில்லை. அவரை எந்த வாகனத்தில் அழைத்துச் சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. சென்னையில் எந்த மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம் என்றால் ராஜீவ்காந்தி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம்.

3) போலிசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் என்னை விசாரிணை செய்த பின்புதான் புகார் அளிக்கப்பட்டது. என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் வீட்டில் வைத்து விசாரித்தார்கள். அவர்கள் வந்து கேட்ட பிறகுதான் புகார் மனுவை அளித்தேன். சாவுக்கு நான் தாமதமாக சென்றதை எதிரிகள் கேட்டனர். நான் ஏன் இன்னும் சாவு எடுக்கவில்லை என்று அவர்களிடம் கேட்டேன். காவல் நிலையத்தில் புகார் அளித்தபிறகு என்னை போலிசார் எங்கும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சாவில் நானும், என் மகனும் மது அருந்திவிட்டு தகராறு செய்தோம் என்றாலும், எதிரிகளுக்கும் சம்பவத்திற்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. நான் புகார் ஏதும் அளிக்கவில்லை என்றாலும், போலிசார் எழுதி கொடுத்த தாளில் கையெழுத்து போட்டு விட்டு போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூறியது போல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகள் மீதுள்ள விரோதம் காரணமாக பொய் புகார் அளித்து பொய் கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.